# திராவிடத்தின் பிதாமகரே! தமிழ் இனத்தின் பாதுகாவலரே!



திராவிடம் பெற்றெடுத்த தவப்புதல்வரே !
தங்கத்தமிழ்நாடு தேர்ந்தெடுத்த நிரந்தர முதல்வரே !
தன்மானத்தமிழினம் கண்டெடுத்த சரித்திர நாயகரே !
ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை காவலரே !
சிறுபான்மையினரின் பாதுகாவலரே !
உலகத்தமிழர்களின் தாயுமானவரே !
உழைப்பாளிகளின் உறவானவரே !

உம் காலடி பட்ட பின் தான்
கீழடி புகழ் வெளிச்சம் பெற்றது !
நீர் அரியணை ஏறிய பின் தான்
தமிழர் வாழ்வு புது ஏற்றம் கண்டது !

மார்ச் 1 உமக்கு பிறந்தநாளாம் !
உம் தலைமையில்
செயல்பட்டு வரும்
கழக உடன்பிறப்புகளுக்கதுவே
ஆகச்சிறந்த பொன்னாளாம் !
உலகமே அதிசயிக்கும்
உம் அரசாட்சி !
நம் கழகமே
தமிழ்நாட்டின் மனசாட்சி !

மாணவ செல்வங்களுக்கு அளித்திட்டீர் ஆயிரம் திட்டம் !
அது பொறுக்காமல்
பொங்கி ஆர்ப்பரிகிறது
ஆரியக்கூட்டம் !
படிக்கும் பிள்ளைகள்
சத்தாய் வளர,
முத்தாய் அளித்திட்டீர்
முதல்வர் காலை உணவுத்திட்டம் !
நாளைய தலைமுறையின் படிக்கும் ஆர்வத்தை தூண்ட
நான் முதல்வன் திட்டம் !
தாயுமானவன் திட்டம்!
தமிழ்ப்புதல்வன் திட்டம்!
ஐ.நா வே வியந்து போற்றும்
இல்லம் தேடி கல்வித்திட்டம்!
பெண்கல்வியை ஊக்குவிக்கும்
புதுமைப்பெண் திட்டம்!

அப்பப்பா ! !

எத்தனை,எத்தனை திட்டங்கள்
உம் சீரிய சிந்தனையால் !

அந்த நன்றிப்பெருக்கோடு
மாணவ சமுதாயம் உளமார
உமை அழைக்கிறது
“அப்பா” என்று,
தப்பாக கூட நல்லது
ஏதும் செய்திடாத,
அடாத கூட்டமொன்று
“அப்பா” என்றழைப்பது கேட்டு பித்துப்பிடித்து அலையுதங்கே !

தேசியக்கல்வி கொள்கையென்று
கொல்லைப்புறவழியில் குலக்கல்வியை புகுத்த நினைத்த
பாசிச கும்பல்,
கல்வியை வளர்க்க திட்டம் தீட்டாமல்,
இந்தியை வளர்க்க திட்டம் தீட்டி
இன்று,மும்மொழி கொள்கையை ஏற்றாலே கல்விநிதி
என அச்சுறுத்த,
சுயமரியாதை சிங்கமென
வெகுண்டெழுந்த உம் தீரம்
கண்டு சிலிர்த்து போனது
தமிழ் இனம் !
வாயடைத்து போனது இந்துத்துவம் !

இன்னும் 1000 ஆண்டுகள் கடந்தாலும்,
திராவிட மாடலின் பெயர் சொல்லும்
நீங்கள் அளித்துள்ள
ஆக்கபூர்வ திட்டங்கள் !



**முனைவர்**
**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு
மாவட்ட தி.மு.க.

திராவிட பேரரசரே !
இன்னுமொரு மொழிப்போருக்கு
நாங்கள் தயாரென
உம் பின்னால்
அணி திரண்டுள்ளது
தமிழ் இனம் !

ஏனெனில் நீரே
எம் சமூகநீதி போராளி !
ஆரிய பாசிசத்திற்கு எதிராளி !
எல்லாரும்,எல்லாமும் பெற வேண்டும்,
தமிழர் வாழ்வு மலர வேண்டும் !
அதுவே நின் குறிக்கோளாகும் !
2026 லிலும் நீரே தமிழ்நாட்டை ஆள வேண்டும் !
நாட்டு மக்கள் வளம் பெற வேண்டும் !
நீவிர் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் !
வாழ்த்துகிறேன் ! வணங்குகிறேன் !

---

தமிழர்களுக்கு மொழியுணர்வு பற்றி

# ஆளுநர் ஆர்.என்.ரவி பாடம் எடுக்க வேண்டாம்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

*சென்னை, மார்ச் 1 -*

தமிழ் - தமிழ்நாடு தமிழ்த்தாய் வாழ்த்து ஆகிய வற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம் என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு பொருளாதாரத்திலும் கல்வியிலும் பெற்றிருக்கும் வளர்ச்சியை பொறுக்க முடியா மல் தமிழ்நாட்டின் மீது வெறுப்பை உமிழ்வதையே தனது கடமையெனக் கருதி செயலாற்றி வருகிறார் ஆளுநர் ரவி.

தனது அரசியலமைப்பு கடமைகளை மறந்து ஆதார மற்ற அவதூறுகளை வைத்து தமிழ்நாட்டை இழிவுப்படுத்தும் அரசியலை செய்வதற்காகவே ஒன்றிய பாஜக அரசு ஆர்.என்.ரவியை ஆளுநராக வைத்திருக்கிறது.



தனது சமூக வலைதளக் கணக்கை இதற்காகவே பிரதானமாக பயன்படுத்திவரும் ஆளுநர் ரவி தனது இன்றையப் பதிவில் “இந்தப் பகுதி, மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது, ஆனாலும் இது புற க்கணிக்கப்பட்டு பின்தங்கியுள்ளது போன்ற உணர்வைத் தருகிறது. தொழில்மயமாக்கலுக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், இங்குள்ள மக்கள் வாய்ப்புகள் புறக்கணிக்கப் பட்டவர்களாக உணர்கிறார்கள்” எனக் கூறியி ருக்கிறார்.

தமிழ்நாடு எதில் பின் தங்கியுள்ளது என ஆளுநர் ரவியால் சொல்ல முடியுமா?

கல்வியில், மருத்துவத்தில், பொருளாதாரத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி இந்திய மாநிலங்கள் எதனோடும் ஒப்பிட முடியாத அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை ஒன்றிய அரசு வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களே சொல்லும், அதையெல்லாம் ஆளுநர் ரவி படித்தால்தானே? படித்தாலும் தமிழ்நாட்டின் மீது வெறுப்பேறிய கண்களுக்கு அவையெல்லாம் எப்படித் தெரியும்?

தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சி இருமொழிக் கொள்கையினால் சாதித்தவை, தமிழ்நாட்டில் எப்படியாவது இந்தியை திணிக்கலாம் அதற்கு புதிய கல்விக் கொள்கையை ஒரு வழியாக வைத்து உள்நுழையலாம் எனும் ஆதிக்கவாதிகளின் சதியை அறியாதவர்களா தமிழர்கள்?

தமிழ்-தமிழ்நாடு-தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம்.

சனாதனத்தையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டில் காலூன்றச் செய்திட குட்டிக்கரணம் போடும் ஆளுநரின் நடவடிக்கைகள் தமிழ் மண்ணில் வேறூன்றவில்லை. அப்படித்தான் மும்மொழி கொள்கையும் மூக்கறுபட்டு நிற்க போகிறது.

மொழித் தேர்வு எது? மொழித் திணிப்பு எது? என்பது எங்களுக்கு தெரியும், இந்த நாடகங்கள் எல்லாம் இங்கே எடுபடாது.

இவ்வாறு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் நன்றி !

## சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

*சென்னை மார்ச்: 1*

இதுகுறித்து ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

முதலவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் வாழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் கடந்த 30 ஆண்டு காலமாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில், மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக பணிகளை செவ்வனே செய்து வருவதுடன், மாற்றுத்திறனாளிகளிடையே கழக களப் பணிகளையும் செய்து வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும், ஒரு வரலாற்று சிறப்பு மிக்க அம்சமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் “உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் பிரதிநிதித்துவம்” வழங்க சட்டமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும், என அறிவித்த மாற்றுத்திறனாளிகளின் காவலர், தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதுடன் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

---

வட்டச் செயலாளர் மா.அகிலன் தலைமை! கூ.பீ.ஜெயின் எம்.சி. முன்னிலை! வில்லிவாக்கம்

# 95 வது வட்டத்தில் கழகக் கொடியேற்றி 772 நபருக்கு அறுசுவை உணவு - நலஉதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

*சென்னை, மார்ச். 1 -*

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்குப் பகுதி, 95 வது தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (01.03.2025 - சனிக்கிழமை) காலை 11 மணிக்கு, வில்லிவாக்கம், மண்ணடி தெருவில் நடை பெறுகிறது.

95 வது வட்டக் கழகச் செயலாளர் மா அகிலன் தலைமை வகிக்கிறார்.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக்குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், சாவித்திரி வீரராகவன், வானவில் விஜய், தே.தமிழ்வாணன், தா. டில்லி, சி.தில்லைவாணி, கோ.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். சுதா தீனதயாளன் எம்.சி, ஜி.ஜெ.பிரபு, கே.இளங்கோவன், ஜே.கருணாமூர்த்தி, எஸ். விஸ்வநாதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், ப.ரங்கநாதன், ஓ.ஏ. நாகலிங்கம் ஆகியோர் கழகக் கொடியேற்றி 772 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழக செயல்வீரர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

பகுதிப் பிரதிநிதிகள் க.விம லநாதன், சே.திலீப் குமார் மற்றும் பாக முகவர் து.ஜெஸ்டின் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி வாணியாறு நீர் தேக்கத்தில் இருந்து தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் 65 நாட்கள் பாசனத்திற்காக தண்ணீரை திறந்து வைத்தார்.உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன்,மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி,ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார்,சரவணன்,சிவப்பிரகாசம்,மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

விழுப்புரம் மத்திய மாவட்டம்

# மாவட்டப் பிரதிநிதி பி. சக்கரபாணி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 1–

விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் நகரக் கழகம் - மாவட்டப் பிரதிநிதி பி.சக்கரபாணி (வயது 59) அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் நகரக் கழகத்தில் மாவட்டப் பிரதிநிதி பி.சக்கரபாணி அவர்கள் உடல்நலக் குறைவால் நேற்று மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வருந்துகிறேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப் பிட்டுள்ளார்.


---

திருநெல்வேலி மாவட்ட கழக மூத்த முன்னோடி

# கவிஞர் குமார சுப்பிரமணியன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 1–



திருநெல்வேலி மாவட்டக் கழக மூத்த முன்னோடியும், மாவட்ட இலக்கிய அணித் தலைவராகவும் பொறுப்பு வகித்த கவிஞர் குமார சுப்பிரமணியன் (வயது 86) அவர்கள் நேற்று (28.2.2025) இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

திருநெல்வேலி மாவட்டக் கழக மூத்த முன்னோடியாக விளங்கிய கவிஞர் குமார சுப்பிரமணியன் அவர்கள் நேற்று மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வருந்துகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தனது இளம் வயது முதல் கழக உறுப்பினராக இருந்து இன்று வரை இயக்கப் பணியை திறம்பட செயலாற்றியவர், திராவிட இயக்க – கொள்கையில் கவிதைகளை புனையக் கூடிய ஆற்றல்மிக்கவர். மாவட்ட இலக்கிய அணித் தலைவராகவும் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றிய கவிஞர் குமார சுப்பிரமணியன் அவர்களின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பேராசிரியர் மா.இளஞ்செழியன்
## மார்ச் 1 (2009)



தி.மு.க. தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

தந்தை காஞ்சி மணிமொழியாருடன் இணைந்து 1947களில் ‘போர்வாள்’ சொந்தமாக நடத்தி, அதன் ஆசிரியராக செயல்பட்டவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியாகவும், அதன்பின் கல்லூரி முதல்வராகவும் விளங்கிய இவர் ‘தமிழன் தொடுத்த போர்’, ‘அறிஞர் அண்ணாதுரை’, ‘ஈரோட்டுப் பாதை’ ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இளஞ்செழியன் நடத்திய ‘போர்வாள்’ ஏடு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் கரங்களில் போர்வாளாகவே மின்னிக் கொண்டிருந்தது.


“இளஞ்செழியன் எழுதிய ‘தமிழன் தொடுத்த போர்’ என்கின்ற அந்த நூலும், இன்னமும் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட்டகம் ஆகும்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நடிகர் குமரி முத்து
## பிப்ரவரி 29 (2016)



தன்னுடைய இளம் வயதிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவினைக் கேட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நடிகவேள் எம்.ஆர்.இராதா நாடகக் குழுவில் நடித்து வந்த இவருடைய சிரிப்பே, இவரது புகழை அதிகப்படுத்தியுள்ளது.

கழக கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்த இவர், சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர்களில் ஒருவராகவும், குணச்சித்திர நடிகருமாக திகழ்ந்தவர்

திரைப்படங்களில் தன்னுடைய நடிப்புத் திறனை வெளிப்படுத்தியதால் “கலைமாமணி”, “கலைச்செல்வம்”, ஆகிய விருதுகளைப் பெற்றவர்.

2014ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் அவர்களின் கரங்களால் கலைஞர் விருது பெற்றவர். பகுத்தறிவுப் பாசறையாம் திராவிடர் கழகம் இவருக்கு “பெரியார் விருது” வழங்கி கௌரவித்துள்ளது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**